பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

10 10 2024 **THURSDAY** **6.30 PM**

<u>மாநில செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) 21-ஆம் நூற்றாண்டு இந்தியா மற்றும் ஆசியான் நாடுகளுக்கானது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2) தமிழகத்திற்கு வரி பகிர்வாக 7 ஆயிரத்து 268 கோடி ரூபாயை மத்திய அரசு விடுவித்துள்ளது

3) பத்ம விபூஷன் ரத்தன் டாடாவின் இறுதிச்சடங்குகள் முழு அரசு மரியாதையுடன் இன்று மும்பையில் நடைபெற்றது.

4) தமிழகத்தில் அடுத்த ஏழு நாட்களுக்கு பரவலாக மழை நீடிக்க வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5) ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியின் ஆடவர் பிரிவிலும் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<>>>>>

21-ஆம் நூற்றாண்டு இந்தியா மற்றும் ஆசியான் நாடுகளுக்கானது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அரசுமுறைப்பயணமாக லாவோஸ் சென்றுள்ள அவர், இன்று **Vientiane** –ல் நடைபெற்ற இந்தியா – ஆசியான் உச்சிமாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

இந்தியா மற்றும் ஆசிய நாடுகள் அமைதியை விரும்பும் நாடுகள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உலகின் பல்வேறு பகுதிகளில் பதற்றம் நிலவிவரும் சூழ்நிலையில், இந்தியா – ஆசியான் நாடுகளுக்கு இடையேயான நல்லுறவு இன்றியமையாதது என்றும் திரு நரேந்திர மோடி கூறினார்.

<<<<<>>>>>

மாநிலங்களுக்கான வரி பகிர்வாக ஒரு லட்சத்து 78 ஆயிரத்து 173 கோடி ரூபாயை மத்திய அரசு விடுவித்துள்ளது.

பண்டிகை காலத்தை கருத்தில்கொண்டு முன்கூட்டியே ஒரு தவணை தொகையும் விடுவிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன்படி, தமிழகத்திற்கு 7 ஆயிரத்து 268 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

தொழில்துறையின் வளர்ச்சிக்காக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், புழக்கத்தில் இல்லாத இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட சட்டங்கள் விலக்கிக் கொள்ளப்பட்டதாக தெரிவித்தார்.

கம்பெனி சட்டங்களில் சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இதன் காரணமாக, தொழில்துறை சிறப்பான வளர்ச்சியை கண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

சர்வதேச தரத்திற்கு இணையாக நமது தொழில் நிறுவனங்களும் போட்டியிட வேண்டும் என்றும் திரு அமித் ஷா கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் HIV விழிப்புணர்வு பிரச்சார இயக்கத்தினை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் இன்று சென்னையில் தொடங்கிவைத்தார்.

சென்னையில் உள்ள அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய மஞ்சள் பைகளை பொதுமக்களுக்கு வழங்கும் திட்டத்தையும் அமைச்சர் தொடங்கிவைத்ததாக மாநில எயிட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

தமிழகம் முழுவதும் மூன்று மாதங்களாக தீவிர விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

பல்வேறு நலத்திட்டங்களின்கீழ் இலவசமாக செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கும் திட்டத்தை மேலும் நான்கு ஆண்டுகளுக்கு நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதற்கு பொதுமக்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

மத்திய அமைச்சரவையின் இந்த முடிவு தங்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த பயனாளிகள் தெரிவித்தனர்.

*(சவுண்ட் பைட் – பயனாளிகள் – 59 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

பத்ம விபூஷன் ரத்தன் டாடாவின் இறுதிச்சடங்குகள் முழு அரசு மரியாதையுடன் இன்று மும்பையில் நடைபெற்றது.

மத்திய அரசு சார்பில் உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இதில் பங்கேற்றார்.

மகாராஷ்ட்ரா ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன், முதலமைச்சர் திரு ஏக்நாத் ஷிண்டே மற்றும் பலர் இதில் கலந்துகொண்டனர்.

<<<<<>>>>>

தமிழகத்தில் அடுத்த ஏழு நாட்களுக்கு பரவலாக மழை நீடிக்க வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திரு கே பாலச்சந்திரன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் – பாலச்சந்திரன் – 39 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகாரில் மேற்கொள்ளப்பட்டுவரும் மேம்பாட்டுப்பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ராஜேந்திரன் இன்று ஆய்வு செய்தார்.

--------------

தருமபுரி மாவட்டத்தில் உள்ள பல்வேறு அரசு பள்ளிகளில் மாநில அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி இன்று ஆய்வு மேற்கொண்டார்.

---------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் மனநலனை சீராக பராமரிப்பது குறித்த விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு தர்பகராஜ் இன்று தொடங்கிவைத்தார்.

---------------

திருச்சியில் சிறுதானிய உணவு கண்காட்சியை ஆட்சியர் திரு பிரதீப் குமார் இன்று தொடங்கிவைத்தார்.

-----------------

திருவண்ணாமலை மாவட்டத்தில் சதந்திரப்போராட்ட தியாகிகள் மற்றும் அவர்களின் வாரிசுகளுக்கு அரசு திட்டத்தின்கீழ் வீடுகள் வழங்கப்படும் என்று ஆட்சியர் திரு பாஸ்கர பாண்டியன் கூறியுள்ளார்.

---------------

நாமக்கல் மாவட்டத்தில் அரசின் திட்டங்களை சம்பந்தப்பட்ட பயனாளிகள் முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று ஆட்சியர் திருமதி உமா கேட்டுக்கொண்டுள்ளார்.

--------------

தென்காசி மாவட்டம் குற்றால அருவிகளில் தண்ணீர் வரத்து குறைந்ததையடுத்து, அங்கு குளிப்பதற்கு சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

---------------

தாம்பரத்தில் இருந்து, தஞ்சாவூருக்கு இன்று நள்ளிரவு மணி 12.15-க்கு முன்பதிவில்லா மின்சார ரயில் இயக்கப்பட உள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

----------------

சென்னை விமான நிலையத்தில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டுவரப்பட்ட ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான தங்கம் மற்றும் மின்னணு சாதனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

**<<<<<END>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியின் ஆடவர் பிரிவிலும் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

கஜகஸ்தானின் அஸ்தானாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா, சீன தைபே-யிடம் தோல்வியடைந்தது.

இதன் காரணமாக இந்தியாவுக்கு வெண்கலப்பதக்கம் கிடைத்தது.

--------------------

உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tanvi Sharma, Alisha** மற்றும் **Pranay Shettigar** –வும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

சீனாவின் **Nanchang**-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டங்களில் **Tanvi Sharma** 21-18, 21-13 என்ற செட் கணக்கில், ஜப்பானின் **Niina Matsuta** –வையும், **Alisha Naik** 21-17, 21-17 என்ற செட் கணக்கில் மலேசியாவின் **Lim Zhi Shin** -யும் வென்றனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் **Pranay Shettigar 21-14, 21-17** என்ற செட் கணக்கில் தாய்லாந்தின் **Eakanath Kitka Winroj** –ஐ வென்றார்.

------------------

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Rutuja Bhosale -** அமெரிக்காவின் **Ema Burgic** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 6-4, 6-4 என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் **Anastasia Goncharova – Madison Tattini** இணையை வென்றது.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் **Rutuja Bhosale** 6-1, 6-2 என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் **Sara Daavettila**-வை வென்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினார்.

--------------------

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் சித்தார்த் பிரதாப் சிங் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர், 21-11, 21-8 என்ற செட் கணக்கில், ஆஸ்திரேலியாவின் **Keith Mark Edison** -ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் **Tanya Hemanth** மற்றும், **Prerana**-வும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் ஹரிஹரன் அம்சகருணன் - ரூபன் குமார் ரத்ன சபாபதி இணையும், மகளிர் இரட்டையர் பிரிவில் அனன்யா – **Prerana** இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

**<<<<<END>>>>>**